இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 148 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 23 – புதன்கிழமை 07 ஜனவரி 2026 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 148 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 23 - Wednesday 07 January 2026 - Chennai 28 Pages ₹ 5.00


# இன்று திண்டுக்கல் மாவட்டத்தில் “முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு”!

## நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!



**சென்னை, ஜன. 7 -**

**திண்டுக்கல் மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு மேற்கொள்வதுடன், பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.20,387 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கியும் இன்று சிறப்புரையாற்றுகிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (ஜனவரி 7) திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பிரமாண்ட அரசு விழாவில் பங்கேற்று, சுமார் 20,387 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளைப் பொதுமக்களுக்கு வழங்க உள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 2 லட்சத்து 62 ஆயிரத்து 864 பயனாளிகள் நேரடியாகப் பயன்பெற உள்ளனர். இதற்காகச் சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கிருந்து சாலை மார்க்கமாகத் திண்டுக்கல் வந்தடைகிறார்.

இன்று நடைபெறவுள்ள விழாவில், நலத்திட்ட உதவிகள் வழங்குவது மட்டுமன்றி, திண்டுக்கல் மாவட்டத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பல்வேறு பணிகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

குறிப்பாக, 337 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 21 புதிய அரசு கட்டிடங்களை அவர் முறைப்படி திறந்து வைக்கிறார். மேலும், மாவட்டத்தின் வருங்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு 174 கோடி ரூபாய் மதிப்பிலான 30 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைக்க உள்ளார்.

குறிப்பாக முடிவுற்ற திட்டப் பணிகளையும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் வகையில் ரூ.1,595 கோடியில் மொத்தம் 323 முடிவுற்ற திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சரின் வருகையையொட்டித் திண்டுக்கல் நகரம் முழுவதும் இன்று விழாக்கோலம் பூண்டுள்ளது.

மதுரை - திண்டுக்கல் சாலை மற்றும் விழா நடைபெறும் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. “மக்களுக்கான அரசு, மக்களின் வாசலுக்கே வந்து திட்டங்களை வழங்குகிறது” என்பதற்கு இந்தத் திண்டுக்கல் விழா ஒரு சான்றாக அமையும் என்றே சொல்லலாம்.

இந்த விழாவில் அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொள்ள உள்ளனர். 2.62 லட்சம் பயனாளிகளுக்கு ஒரே நாளில் உதவிகள் சென்றடைவதை பொது மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

**முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு! மாவட்டச் செயலாளர்கள் அறிக்கை!**

திண்டுக்கல் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.1.2026 - புதன்கிழமை) வருகை தரவுள்ளார். முதல்வர் அவர்களுக்கு 7.1.2026, புதன்கிழமை காலை 8.00 மணியளவில் பாண்டியராஜபுரத்தில் தொடங்கி தோமையார்புரம் - அஞ்சலி ரவுண்டானா வரை முதல்வர் அவர்கள் வரும் வழியெல்லாம் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்,


